# உண்ணுவிரதத்தைக் கைவிடுமாறு வெகுஜன அமைப்புகோரிக்கை

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 02 இதழ் 34
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 16-3-1995

(யாழ்ப்பாணம்)
உண்ணுவிரதத்தின் புனிதத் தன்மையை புரிந்து கொள்ள முடியாத ஸ்ரீலங்கா அரசை நம்பி நீதியான தீர்வை எதிர் பார்த்து ஏமாந்து போய்விடா தீர்கள் என்றும் உடனடியாக

(4ம் பக்கம் பார்க்க)

## கெனத் கோரிக்கை மறுப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வந்துள்ள அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்ஞண்டோ, பேராசிரியர் ஜயதேவ உயங்கொட, திரு. சார்ள்ஸ் அபசேகர ஆகியோர் நேற்றுக் காலை உண்ணுவிர

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசை நம்பிப் பயனில்லை
### கைதிகளுக்கு உறவினர் கடிதம்

(யாழ்ப்பாணம்)
'அரசாங்கத்தை நம்பி பயன் இல்லை ஆகவே உங்கள் உயிரை வீணுக மாய்க்க வேண்டாம். உண்ணுவிரதத்தை கைவிடுங்கள்'' என்று உண்ணுவிரதமிருக்கும் போர்க்

(4ம் பக்கம் பார்க்க)

# ஒருதலைப்பட்ச தீர்மானங்கள் எடுப்பதை தவிர்த்து அரசு புலிகளுடன் ஆலோசித்து முடிவுகளை எடுக்கவேண்டும்!

## இதுவே சமாதான முயற்சிக்கு வழி - திலகர்

[லண்டன்]
சிறிலங்கா அரசாங்கம் ஒருதலைபட்சமான தீர்மானங்கள், செயற்பாடுகள் எடுப்பதை தவிர்த்து விடுதலைப்புலிகளுடன் கலந்தாலோசித்து முடிவுகளை மேற்கொள்வதன் மூலம் சமாதான முயற்சியில் நம்பிக்கையை ஏற்படுத்தலாம். இவ்வாறு டென்மார்க்கில் ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்தபோது விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் திரு. லோறன்ஸ் திலகர் தெரிவித்தார்.

கொபன்ஹேகனில் ஜனதி செய்தியாளர் அங்கு பேசப் கொபன்ஹேகன் உலக சமூக பதி சந்திரிகா குமாரதுங்கவை பட்டவிடயங்கள்பற்றிக்கேட்ட நல மாநாட்டுக்கு நானும் சந்தித்து உரையாடிய திரு. போது, அவர் மேலும் கூறிய போயிருந்தேன், அங்கு திருமதி லோறன்ஸ் திலகரை, பி.பி.சி. தாவது.

(4ம் பக்கம் பார்க்க)

## தத்தம் நாடுகளுக்கு ராஜதந்திரிகள் அறிக்கை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கிற்கு அண்மையில் விஜயம் செய்த கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் இப்பகுதிகள் தொடர்பான தமது அறிக்கைகளை தத்தம் நாடுகளுக்கு அனுப்பவுள்ளனர். இவர்களின் அறிக்கையின் பின்னரே இலங்கைக்கான உதவிகள் குறித்து இந்நாடுகள் முடிவு செய்யும் எனத் தெரிவிக்கடபடுகிறது.

அவுஸ்திரலியா, கனடா. பின்லாந்து, பிரான்சு, ஜேர்மனி, ஒல்லாந்து, ஜப்பான், நோர்வே. சுவீடன். பிரிட்டன், அமெரிக்கா, சுவிஸிலாந்து ஆகிய 12 நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகள் இம் மாதம் 6ம் திகதி தொடக்கம்

(4ம் பக்கம் பார்க்க)

## 4-ம் கட்டப் பேச்சின்போது 2 அமைச்சர்கள்பங்குபற்றுவர்

(கொழும்பு)
நாலாம் கட்டப் பேச்சு வார்த்தையின்போது அரச தரப்புக் குழுவில் இரு அமைச்சர்களும் கலந்துகொள்வார்கள் என அரசு வட்டாரங்கள் தெரிவித்ததாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நாலாம் கட்டப் பேச்சின் போது அரசு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க உள்ளதால், இப்பேச்சுக்களின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அமைச்சர்கள் இருவர் அரச குழுவில் இடம்பெற உள்ளதாகவும் அச்செய்தி தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் வற்புறுத்திய நான்கு கோரிக்கைகளையும் முற்ருக நிராகரித்துள்ள ஜனதிபதி சந்திரிகா, தன்னிச்சையாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ருர். இந்நிலையில் நாலாம் கட்டப் பேச்சுக்களை ஏப்ரல் 2ம் திகதி முதல் 10ம் திகதிக் கிடையில் நடத்தலாம் எனப் புலிகளின் தலைவர் திரு. பிர

(4ம் பக்கம் பார்க்க)

## பிரிகேடியர் பீரிஸ் மேஜர் ஜெனரலாக உயர்வு

(கொழும்பு]
விடுதலைப்புலிகளுடனன பேச்சு வார்த்தையில் இராணுவத்தின் பிரதிநிதியாக கலந்துகொண்ட பிரிகேடியர் சிறிபீரிஸ் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு வழஙகப்பட்டு இராணுவத்தின் முக்கிய அதிகாரியாக நியமிக்கப் படவுள்ளார் எனத் தெரிய வருகிறது.

ஸ்ரீலங்காவின் தடுப்புக் காவலில் உள்ளோர் புனர் வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா மீளவும் இராணுவ கட்டமைப்புக்குள் சேர்க்கப்படவுள்ளார்.

ஐ. தே. க. அரசு பதவியிலிருந்த போது சிறிலங்கா போர்க் கைதிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காக இவர் யாழ்ப்பாணம் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனந்த வீரசேகராவுக்கும் மேஜர் ஜெனரல் பதவியை அரசு வழங்கவுள்ளது.

வை ஆர். விஜயவர்தன,

(4-ம் பக்கம் பார்க்க)

## ''அரசு முடிவைத் தெரிவித்துவிட்டது எமது பதிலை விரைவில் தெரிவிப்போம்''
### — தமிழ்ச்செல்வன் உரை

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களின் அன்ருட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாதென்று திட்டவட்டமாக அரசாங்கம் தனது இறுதி முடிவை தெரிவித்து விட்டது. அதுபோல், நாமும் இன்னும் ஒரிருதினங்களில் எமது முடிவையும் அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தவுள்ளோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்செல்வன் நேற்று நாவலர் மண்டபத்தில் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தினுல் நடத்திய வைபவமொன்றில் உரையாற்

(4ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. பத்திரிகையான 'பெரலிய' ஆசிரியர் மீது கடுமையான தாக்குதல்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வப் பத்திரிகையான 'பெரலிய' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. சுஜீவ கமகே, கடந்த சில தினங்களுக்கு முன் இனம் தெரியாதவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடவத்தையில்வைத்து இரவு

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ உயர் தலைமையில் ஜனதிபதி மாற்றம்செய்வார்

(கொழும்பு)
தனது கட்டளைகளை மீருத வகையில் ஜனதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க சிறிலங்கா இராணுவத்தின் உயர் தலைமையில் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளார்.

இம்மாற்றங்கள் தொடர்ந்து நீடிக்ககூடிய முக்கிய நிகழ்ச்சியாக அமையும் எனவும் கூறப்படுகின்றது.

இராணுவத்தின் உயர் கட்டளைப்பீடம், இராணுவ கட்டமைப்பு ஆகியவற்றில் மாற்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆங்கிலம் — 95

O/L Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 9, 10) உட்பட அரம்பத்திலிருந்து ஆங்கில ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, மணல்தறை லேன், திருநெல்வேலி.
(சி-1411)


## கடும் வரட்சி

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலும் கடும் வரட்சி நிலவுகின்றது கிணறுகள்குளங்கள் யாவும் வற்றும் நிலையிலுள்ளன. கடும்வரட்சிகாரணமாக கோழிகள், கால் நடைகளுக்கு நோய்கள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.
-59

## நாற்று வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் வெளியீடான ''நாற்று'' தை, மாசி முதலாவது இதழ் நேற்று வெளிவந்துள்ளது.

அழகிய அட்டைப்படத்துடன் உள்ளே வர்ணப்படங்களுடன் கூடிய இச்சஞ்சிகையில் அனைத்துப் பெண்கள் நாள், இளவயதுத் திருமணங்கள், முதன்மைப் பெண் பத்திரிகையாளர், கரிபியப் பிரதேச பெண்கள் அமைப்புகள், பெண்கள் ஆய்வுகளும் அதன் தேவைகளும், உங்களோடு ஒரு நிமிடம். சாதனையும் வேதனையும், மனநோய் சுகாதாரப் பிரச்சனைகள், கட்டுரைகள், செய்தித் துணுக்குகள். மற்றும் பல அம்சங்களுடனும் இவ்விதழ் வெளிவந்துள்ளது, -க


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

### அனுமதி வெற்றிடம் நிரப்புதல் 1993/94

### பௌதீக விஞ்ஞானம் விவசாய விஞ்ஞானம்

1993/94 கல்வியாண்டிற்கு மேலதிகமாக பௌதீக விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல்கள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்டு யாழ். பல்கலைக் கழக விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிகளிற்கு தெரிவு செய்யப்பட்டவர்களிற்கு மானிய ஆணைக்குழுவால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. உரியவர்கள் 21-04-1995 ற்கு முன் தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலதிக விபரங்களை பரீட்சைக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
(ஏ-4824)


# இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை மகளிர் குழு நடத்தும் அனைத்துலக பெண்கள் தினம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் யாழ். மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி கு. சிவராசா தலைமையில் நடைபெறும்
162

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடப் பரிபாலன சபை மாதாந்தச் சொற்பொழிவில் இன்று வியாழக்கிழமை பி. ப. 3-30 மணிக்கு 'கந்தபுராணக் கவியமுதம்' எனும் பொருள் பற்றி இளைப்பாறிய அதிபர் க. சி. சண்முகம் உரையாற்றுவார்.

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் இந்து தர்மம் மலர்-6 வெளியீட்டு விழா சுன்னாகம் ஐயனார் கோயிலில் இன்று 16ம் திகதி வியாழக்கிழமை மு. ப 11 மணிக்கு ஆத்மஜோதி திரு நா. முத்தையா தலைமையில் நடைபெறும்:

0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த 8ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இன்று 16ம் திகதி சப்பறத்திருவிழாவும் நாளை 17ம் திகதி தேர்த்திருவிழாவும் 18ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். 139

0 0

(நெல்லியடி)

அப்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 16ம் தேதி அதிபர் எம். ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது. - 160

0 0

(உடுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழுநிலா அறிவியல் கருத்தரங்கு இன்று 16ம் திகதி வியாழக்கிழமை மாலை நான்கு மணிக்கு சுன்னாகம் பொதுசன நூலகத்தில் நடைபெறும். 109

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன்இழந்தோர் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 16ம் திகதி வியாழக்கிழமை பி ப 2மணிக்கு நவீல்ட் பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கம ஆதரவில் அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம் வழங்கும் பெருவிழா இன்பருட்டி காண்டீபன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று 16ம் திகதி வியாழக்கிழமை மாலை 6மணிக்கு நடைபெறவுள்ளது. ம

## கைதடியில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கைதடி ஐக்கிய கிராமிய ராஜ்யம் நடத்தும் அறிவியல் கருத்தரங்கு இன்று காலை 9 மணியளவில் கைதடி கலைவாணி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

திரு. வே சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக் கழக வணிகத்துறை தலைவர் திரு கே. தேவராசா நிர்வாக முகாமைத்துவம் என்னும் பொருளில் உரையாற்றுவார். ரி

## ஐலண்ட், திவயின பத்திரிகைகள் மீது

# ஜனாதிபதி செயலகம் சீற்றம்

(கொழும்பு)

இராணுவத்தினர் ஆலோசனையை பொருட்படுத்தாது விடுதலைப்புலிகள், அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையை பயன்படுத்தி பங்கர்களை அமைக்கின்றனர் என ஜனாதிபதி சந்திரிகா ஹோபன் ஹேகனில்கூறியதாகதிவயின' ஐலன்ட்பத்திரிகைகளில் வெளியாகியிருக்கும் செய்திகள் முற்றிலும் பொய்யானது எனவும் உண்மையை திரித்து கூறியதாக அமைந்திருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம்அறிவித்தது

மோதல் தவிர்ப்பு கடைப்பிடிக்கப்படும் இவ்வேளையில் இத்தகைய பொய்யான தகவல்களை பிரசுரித்து சமாதான முயற்சியையும் நாட்டின் ஒற்றுமையையும நேராக அல்லது மறைமுகமாக செலுத்தமுற்படும் பத்திரிகைகளில் முயற்சியையும் தாம் பாரதூரமாக கருதுவதாக ஜனாதிபதி கூறியதாக ஜனாதிபதியின் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக கிழக்கு நிலைமைகள் குறித்து ஐலன்ட் திவயினபத்திரிகைகள்பொய்ப் பிரசாரங்களை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.
-கே-சி

# கஷ்டப் பிரதேசங்களுக்கு ஆசிரியருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

கஷ்டப்பிரதேசங்களில் கடமைபுரியாத 45 வயதுக்குட்பட்ட ஆசிரியர்களை கஷ்டப்பிரதேசங்களில் பணிபுரிவதற்கு இடமாற்றம் செய்யுமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான தெரிவித்துள்ளார்.

மாகாண கல்வி அமைச்சு· மத்திய கல்வி அமைச்சு ஆகியவற்றில் உத்தியோகத்தர் அடங்கிய கலந்துரையாடலிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும்போது அரசியல்வாதிகள் குறுக்கீடுகள் செய்கின்றார்கள் என்று கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இருந்தபோதிலும் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார் என்று 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.
-ம-சி

# வசதிகள அற்ற நிலையிலும் கல்வி முன்னேற்றம் சிறப்பாயுள்ளது

— நடராஜசுந்தரம் உரை

(யாழ்ப்பாணம்)

சகல வசதிகளுடனும் தமது கல்வியை முன்னெடுத்துச் செல்லும் கொழும்பு மாணவர்களுடன், எந்த விதமான வசதிகள் அற்ற நிலையிலும் எமது மாணவர்கள் சரிநிகர் புள்ளிகள் பெறுவது எமது மாணவர்களின் திறமையையும் கல்வியில் காட்டும் ஊக்கத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

யாழ். இந்துக்கல்லூரிகுமாரசாமி மண்டபத்தில நேற்று முன்தினம் யாழ் இந்துக்கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியம் நடாத்திய வரவு 5-வது மலர் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். பல்கலைக்கழ முகாமைத்துவத்துறை தலைவர் திரு மா. நடராஜசுந்தரம் தெரிவித்தார்.

மன்றத்தலைவர் செல்வன் சி. குகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. நடராஜசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் முகாமைத்துவ விஞ்ஞானம் இன்று உலகரீதியில் முதன்மை வகித்துவருகிறது. எமதுமாணவர்களின் கல்வியை எடுத்துநோக்குமிடத்து இங்கு போக்குவரத்துப்பிரச்சனைகள், மின்சாரமின்மை இவைபோன்ற வசதிகள்அற்ற நிலையிலும் இவர்கள் கல்வியில் மேலோங்கி நிற்பதற்கு இவர்களின் விடாமுயற்சியே காரணமாகும் கொழும்பு மாணவர்களுடன் இவர்களை ஒப்பிடும் பொழுது கொழும்பில் சகல விதமான வசதிகளுடனும் மாணவர்கள் தமது கல்வியை முன்னெடுத்துச் செல்கிறார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் எதுவித வசதிகளும்அற்ற நிலையில் எவ்வளவோ கஸ்டத்தின் மத்தியில் மாணவர்கள் தமது கல்வியை முன்னெடுத்துச் செல்கிறார்கள்,

கொழும்பிலும் சரி யாழ்ப்பாணத்திலும் சரி மாணவர்கள் நன்றாகப் படிக்கிறார்கள்.

பரீட்சைகளில் கூடுதலான புள்ளிகளைப் பெறுகிறார்கள் இதுவே வெட்டுப்புள்ளி அதிகரிப்புக்குக் காரணம் என்றார்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம இம்மலரின் முதல் பிரதியை வெளியிட்டுவைக்க இலங்கை வங்கி முகாமையாளர் திரு. ஐ. தங்கேஸ்வரன் பெற்றுக் கொண்டார். யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. தேவராஜன் ஜெயராமன் இந் நூலின் அறிமுகவுரையை நிகழ்த்தினர். -162-சி

## மண்ணெண்ணை விநியோகம்

(அரியாலை)

யாழ். குடாவில் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் பாவனையாளர் பங்கீட்டு அட்டைக்கு 3 லீற்றர் மண்ணெண்ணை லீற்றர் தலா 20 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. -59


கரவெட்டி, இராசகிராமம்

சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்கா வளர்ச்சி நிதிக்கான

## மாபெரும் கலைவிழா

காலம்: 16-03-95 மாலை 7-00 மணி
இடம்: நெல்லியடி
மத்திய மகா வித்தியாலயம்

கலை நிகழ்ச்சிகள்:
ஒரே இடத்தில் சம நேரத்தில்
மூன்று மேடைகளில்
தமிழீழ கலைஞர்களால் உருவாக்கப்பட்ட
★ ராஜன்
★ அருணா
★ சாந்தன்
இசைக் குழுவினரின்
பாடகர்கள்:
திவாகர், ஜே. ஆர். சுகுமார், எஸ். ஜி. சாந்தன்
போராளிகள், சிட்டு, செங்கதிர்
ஆகியோர் இணைந்து வழங்கும்

## 'இன்னிசைகான மழை'

கலை நிகழ்ச்சியும்
இவற்றுடன்
கோப்பாய்
சுதேசிய கலா மன்றம் வழங்கும்
அவன் ஒரு மந்திரி
ஆவினில் இனியவள்
இருநாடகங்களும் நடைபெவுள்ளன
இக்கலை விழாவில் அனைவரையும் வரவேற்பதில்
மகிழ்ச்சி அடைகின்றோம்

ஒலி அமைப்பு
கலைமதி சவுனஸ்
சேவஸ்
நெல்லியடி.

ஒளி அமைப்பு
மனோ
ஒளி அமைப்பாளர்
கோப்பாய்.

கலைவிழா ஏற்பாட்டுக்குழு
சிறுவர் போஷாக்கு பராமரிப்புப் பூங்கா,
இராசகிராமம், கரவெட்டி.
(சி-1415)

நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் இளைஞர் மன்றம்

### மணிவாக்கு

தமக்குத்தொல்லைதராத எதைப்பற்றியும் மக்கள் கவலைப்படமாட்டார்கள் ஆகவேஏதாவதொன்றை உணர்த்தவேண்டுமானால் அவர்களின் மனதைத் தாக்கும் வகையில் உணர்த்தவேண்டும். இல்லை உணர்த்தாமல் இருப்பதே நல்லது.

பேனாட்ஷா

## நமது நோக்கு

### அனுமதி மறுப்பு

யாழ். பல்கலைக்கழகத்திற்கான கட்டடப்பொருட்கள், கணனிகள் போன்வற்றை எடுத்துவருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

தடைகள், தாமதங்கள் அகற்றப்பட்டு பொருட்கள் தாராளமாக வடக்கிற்குச் செல்கின்றன என அடிக்கடி அறிக்கைகள் வருகின்றன.

இது அண்டப் புளுகா அல்லது ஆகாசப் புளுகா என ஒரு விவாதம் நடந்தாலும் நாம் வியப்படையப்போவதில்லை

ஏனெனில் - வடபகுதி மாணவர்களுக்கும் பல அநீதிகள் முன்னைய அரசால் விளைவிக்கப்பட்டன என்பதை ஏற்றுக்கொண்டு அவற்றை விரைவாக நீக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தான் கருத்துக்கள் கூறப்பட்டன.

ஆனால் - நடைமுறையில் நாம் காண்பதென்ன?

வெட்டுப்புள்ளி விவகாரத்தில் நீதி இன்றும் வழங்கப்படவில்லை என்பதை அண்மையில் பாதிக்கப்பட்ட மாணுக்கர் புள்ளி விபரங்களுடன் பேரணி நடாத்தி வெளிப்படுத்தினார்கள்.

தெற்கிலே - பல பல்கலைக்கழகப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் எதுவித தாமதமுமின்றி நடைபெற்றன என்பதை எவரும் மறக்க முடியுமா?

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செயற்பட்டு வரும் வேளையில், வடபகுதி மாணுக்கரின் கல்வி மேம்பாட்டுக்கானநடவடிக்கைகளைப் பாதுகாப்பு அமைச்சு வேண்டுமென்றே தாமதப்படுத்துகின்றது என்ற கருத்து உருவாகுவதை அரசு தடுத்து நிறுத்த வேண்டாமா?

கட்டடப்பொருட்கள், கணனிகள் வழங்கல் போன்ற சாதாரண விஷயங்களிலேயே பாதுகாப்பு அமைச்சு நடந்து கொள்ளும் விதம் மக்களின் நம்பிக்கையைப் பெற உதவுமா?

அதிகாரப்பரவலாக்கலில் இது எப்படி நடந்து கொள்ளும்என்பதையிட்டு மக்கள் சந்தேகம் வளருமல்லவா?

தடைகள், தாமதங்கள் மூலம் அச்சுறுத்திக் கொண்டு, அரசியல் தீர்வு காணமுடியாது என்பதை அரசுக்குக் கூறிவைக்க விரும்புகிறோம்.!

# 2000 பேர் கொல்லப்பட்ட சப்புகஸ்கந்த வதை முகாம்

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் சப்புகஸ்கந்த உர வீடமைப்பு தொகுதியில் ஐ. தே. க, ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டிருந்த வதைமுகாமில் 2000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாமென 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுகையில்: இந்த குடியிருப்புத் தொகுதி மூன்று வடிவங்களைக் கொண்ட 62 வீடுகளைக் கொண்டது. இதில் நான்கில் மூன்று பகுதி இராணுவ முகாமாக மாற்றப்பட்டு வருகிறது.

பியகம தொகுதியில் உள்ள இந்த வீடமைப்பு தொகுதிக்குள் 1985ம் ஆண்டுப் பகுதியில் நுழைவதற்கு படையினருக்கும் அரசியல்தலைவர்களுக்கும் மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

இந்த வதை முகாம் பற்றிய தகவலை முதன் முதலில் பொலிஸ் அதிகாரி ஒருவரே வெளியிட்டார். தனிப்பட்ட காரணங்களுக்காக கொல்லப்படவிருந்த இவர் பின்னர் எப்படியோ தப்பிவிட்டார்- இந்த முகாம் பற்றி அவர் கூறுகையில்:

இந்த வதை முகாம் காட்டில இருக்கின்ற இராணுவ முகாம் இல்லை அரசியல் கொலைக் குழுவே இங்கிருந்தது. சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் இதன் தலைவராக இயங்கினர். இதன் ஆலோசகராக இலங்கையில் புகழ் பெற்ற அரசியல் வாதியொருவர் செயற்பட்டார். கொலப்பட்டவர்கள் அனைவரும் ஜே. வி. பி. என சந்தேகிக்கப்பட்டவர்களே என்றுர்.

இந்த கொலைகளுக்காக 'கோனவலசுனில்' என்ற பிரசித்திபெற்ற கொலைகாரனும் அவனது குழுவினரும் பயன்படுத்தப்பட்டனர். சிறையில் இருந்த இவன் ஜனதிபதியின் விஷேட பணிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டே இப்பணிக்கு அமர்த்தப்பட்டான்.

இந்த வதை முகாமில் தினமும் 24 மணிநேரமும் ''கொன்றுவிடாதீர்கள்'' எனக் கதறும் மனிதக் குரல்கள் ஒலிக்கும் - மரண வேதனையால் துடிக்கும் மனிதர்களது கதறல் கேட்கும் இச் சத்தங்களெல்லாம் ஒவ்வொரு நாளும் கேட்டபடியே இருக்கும் என்று கூறுகிறுர் அருகிலுள்ள கிராமவாசி ஒருவர்.

சி

# 3வது ஈழப்போரா, சமாதானமா அரசின் நோக்கம் புரியவில்லை

## — கொழும்பு பத்திரிகை விசனம்

(கொழும்பு)

அரசின் மனதில் தற்போது இருப்பது மூன்ருவது ஈழப்போரா அல்லது சமாதானமா என்பது யாருக்குமே தெரியவில்லை என கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: சமாதானம் என்ற போர்வையில் புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கும் நோக்கிலேயே அரசு செயல்பட்டு வருகிறது. இதனை அது வெளிப்படையாகவே செய்யமுனைகிறது.

இந்நிலையில் இன்றைய அரசாங்கத்தின்மீது கண்மூடித்தனமான நம்பிக்கை வைக்க தமிழ் மக்களே ஒருபோதும் தயாராக இல்லாத போது புலிகள் நம்பிக்கை வைப்பார்களா என்பது கேள்விக்குறி. அப்படி வைக்கவேண்டுமென எதிர்பார்ப்பது நேர்மையானதல்ல. கபடத்தனமானது.

வரலாற்றுக் குருடர்கள் மட்டுமே கண்மூடித்தனமாக நம்புவார்கள், தற்போது புலிகள் கூறுவதுபோல வெளிப்படையான பேச்சுக்களே தேவை என்னென்ன செய்யப்படவேண்டுமென்பதுபற்றியுமே பேசப்படவேண்டும். ஏமாற்றுவதற்கான பேச்சுக்கள் தேவையில்லை.

சந்திரிகா அரசு இதற்கு தயாராக இல்லை என்ருல் மக்களைப் பார்த்து அவர் பயப்படவேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை.

சி

# கொழும்பில் படை அதிகாரிகள் சுகபோகங்களை அனுபவிக்கிறுர்கள்

## — சிங்கள பத்திரிகை தகவல்

(கொழும்பு)

வடக்கில் இராணுவ முகாம்களில் இருக்கும் இராணுவத்தினர் போதிய உணவு இன்றி இருக்கையில் கொழும்பில் உள்ள இராணுவ அதிகாரிகள்மிகவும் ஆடம்பரமானவாழ்க்கை வாழ்கின்றுர்கள் என்று 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த அதிகாரிகள் விலை உயர்ந்த வாகனங்களில் திரிவதும் உயர்ந்த ரக உணவு உண்பது மாத்திரமல்லாமல் இராணுவ முகாம்களுக்கு செலவதற்கு ஹெலிகொப்டர்களையும் பாவித்து வருகிறுர்கள்.

இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வா தற்போது 13 வாகனங்களை தமது பாவனைக்கு வைத்துள்ளார். இந்த வாகனங்கள் பென்ஸ், டொயாட்டோ, கொரலா, பஜிரா ஆகிய விலையுயர்ந்த ரகததைச் சேர்ந்தவையாகும்.

இதைவிட மேஜர் ஜெனரல் லக்ஸ்மன் அலகம 7 வாகனங்களும், மேஜர் ஜெனரல் தளுவத்த 5 வாகனங்களும், மேஜர் ஜெனரல் விஜயரத்ன 4 வாகனங்களையும் தற்போது தமது பாவனையில் ஈடுபடுத்தி வருகிறுர்கள். முன்னுள் பாதுகாப்புச் செயலாளரான ஹமில்டன் வனசிங்க கடமை புரியும் காலத்தில் 10 வாகனங்களுக்கு மேல் பாவனையில் வைத்திருந்தார்.

அத்தோடு இராணுவ தளபதிக்கு இராணுவத்தலைமையகத்தில் உத்தியோக பூர்வ வாசஸ்தலமும், மற்றும் பௌத்த லோக மாவத்தையில் ஒரு வீடும், நுவரேலியாவிலும், நியத்தலாவையில் 2 வீடுகளும் இப்படிப் பல சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதோடு பாதுகாப்புச் செலவில் பெருந்தொகையான பணம் இதற்கு செலவிடப்படுகின்றது.

படையினர் மத்தியில் பதவி உயர்வுகள் வழங்கும்போது அரசியல் செல்வாக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பூநகரி இராணுவ முகாம் தாக்குதலின் போது தவறுகள் புரிந்த இராணுவ அதிகாரிகள் பலருக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்படியிருக்கையில் கஷ்டப்பட்ட பிரதேசங்களில் சிறைவாசம் அனுபவிப்பதுபோன்று இராணுவ சிப்பாய்கள்கடமை புரிகின்றுர்கள். ஆனல் அதிகாரிகளோ யுத்தத்தை நடதிக் கொண்டு அதனல் பெரும் சுகபோகத்தை அனுபவிக்கிறுர்கள்என்றும் 'ஹிரு' மேலும் தெரிவித்துள்ளது.

ம-சி

# இராசி பலன்

**16–3–1995**

வியாழக்கிழமை

(தமிழுக்கு பங்குனி- 02

சதுர்த்தசி முற்பகல் 8-51 வரை; பூரம் மு. இ. 9-23 வரை. சித்தயோகம் இராகு காலம் பகல் 1-51 முதல் 3-21 வரை: சுபவேளை காலை 7-51 முதல் 9.21 வரை,

மேடம்: வாக்குவாதம், அமைதியின்மை, தொழில் லாபம்.

இடபம்: அயலவர் சிந்தை, பணமுடை, தைரியக்குறைவு.

மிதுனம்: மனச்சந்தோசம், உறவினர் சங்கமம், சுபச் செலவு.

கடகம்; குடும்ப உறவில் விரிசல், தனித்திருத்தல், கற்பனை.

சிங்கம்; திருமணபந்தம், சுபகாரியம், உல்லாசம்.

கன்னி: பயப்படுதல், அசுப நினைவு, சகோதர பகை.

துலாம்: தாயார் அறிவுரை, கலந்துரையாடல், பயண நன்மை.

விருச்சிகம்; தொழில்சிறப்பு, நினைத்தது நிறைவேறல், சயன சுகம்.

தனுசு: விரோதித்தல், முயற்சி தடைப்படல், அலைச்சல்.

மகரம்: வழித் தொல்லை, குடும்பக்கவலை, விதண்டாவாதம்.

கும்பம்: விருந்தினர்வருகை அதிகாரிகள் பாராட்டு, காரிய சித்தி.

மீனம்: உறவினர் உதவி, குடும்ப சுகம், புதிய சிந்தனை.

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### திறமை வெளிவர

அவர் ஓர் ஏழை அங்கிலிகன் பாதிரியார்; ஆனல் தன் வீட்டுச் சுவர்களுக்கு தானே அடிக்கடி வெள்ளையடித்தார். ஏன்? தன் குழந்தைகள் கரிக் குச்சியால் சுவர்களிற் கீறி விளையாடுவதை தடுக்கவில்லை.

விளைவு? அவரது மகன் யேசுவா றெயினல்ட்ஸ் 18ம் நூற்ருண்டின் புகழ்பெற்ற ஓவியரானுர்: படங்களை விற்றுப் பணம் குவித்தார். 'சேர்' பட்டமும் கிடைத்தது.

அதற்காக......இன்று...... சுவர்களில் படம் தீட்டவிட வேண்டுமென்றில்லை. வீட்டுச் சுவரில் ஒரு பகுதியை கரும்பலகையாக்கிவிடுங்கள். சுதந்திரமாகக் கீறி எழுதப் பழக விடுங்கள். ''கீறுதே;'' என எதிர்மறையாகத் தடுக்காது, வசதிகளைச் செய்து கொடுத்து, சுதந்திரமாக திறமைகள் வெளிவர இடமளிக்கவேண்டுமென்பது உளவியலாளர் கருத்து!

— மயூரன்

### மண்ணெண்ணை விநியோகம்

(நெல்லியடி)

வடமராட்சி கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு யாழ். செயலகம் ஊடாக சுமார் 450 பரல் மண்ணெண்ணை வழங்கப்பட்டுள்ளது. -160

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–03-16**

வியாழன் இரவு

08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
08.10 சித்தமருத்துவக் குறிப்புகள்
08-20 உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''புதிய உணர்வுகள்'' குறுநாடகம்
08-30 செய்திகள்
08-40 மொழியும் வாழ்வும்
08-50 தாயகப்பாடல்கள்

**1995-03-17**

வெள்ளி காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-16**

வியாழன் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 இசையும் கதையும்
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 பொன் விளையும் பூமி
06-15 விளையாட்டு செய்திகள்
06-20 கேள்வி-பதில் விளையாட்டுத் தொடர் பானவை
06-25 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தவக்கால நற்சிந்தனை

'உனக்கு இன்பசுகம் கிடைத்தது. இலாசாருக்குத் துன்ப துயரமே கிடைத்தது''

(லூக். 16:25)

இவ்வுலகில் இன்பத்தைக் தேடுபவன். இறைவனை நினையான், மதிக்கமாட்டான் என்பது பணக்காரனும் இலாசாரும் என்ற உவமை மூலம் எமக்கு எடுத்துரைக்கப்படுகிறது. துன்ப துயரத்தை நல்மனதோடு ஏற்று வாழ்பவனுக்கு எத்தகைய மோட்ச இன்பம் காத்திருக்கிறது என்பதை நாமும் சிந்திப்போம்.

— தா. மைதிலி

காடுதனை வளர்த்திடுவோம்
சூடுதனை தணித்திடுவோம்

# போரைப் பிரகடனப்படுத்த அரசு முயன்று வருகிறது

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய அரசு, போரைப் பிரகடனப்படுத்த முயல்கிறது. இது யாருக்கும் உவப்பான விடயமல்ல. சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டிய பொறுப்பு அரசையே சார்ந்தது

இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று அரசின் போக்குக் குறித்து விமர்சித்துள்ளது. அப்பத்திரிகை மேலும் கூறுகையில்:

புலிகளுக்கும் - அரசுக்கும் இடையிலானபேச்சுவார்த்தை மந்தநிலையை அடைந்துள்ளது. பேச்சுவார்த்தை முறிவடைந்தால் யுத்தம் மூலமே தீர்வு என்று அமைச்சர் ரத்வத்தை கூறியுள்ளதுடன், அரசு படையினரைத் தயார் நிலையிலும் வைத்திருக்கிறது.

மீண்டும் ஒரு யுத்தம் தொடங்கினால் நாடு முழுவதிலும் அதன் பாதிப்புக்கள் தெரியவரும். மீண்டும் உயிர் இழப்பு, அனர்த்தங்கள், துயரம், சிக்கல் என வாழ்க்கை மோசமான சூழலை அடையும்

இதேவேளை சமாதான முயற்சிகளைத் தடைப்படுத்தும் கருத்துக்களை அவசரப்பட்டு வெளியிடாமல், சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும் என விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. சி-ரி

# மகர யாழ். விருது இன்று தெரிவுநடைபெறு[illegible]

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தால் இவ்வாண்டுக்கான 'மகரயாழ் விருது' பெறுபவரைத் தெரிவு செய்வதற்காக மேற்படி கழகத்தின் அறிஞர் குழு, இன்று வியாழன் காலை 9-00 மணிக்கு கம்பன் கோட்டத்தில் கூடவுள்ளது.

இவ்விருது பெறுபவர் ஒரு லட்சம் ரூபா பணமும், தங்கப்பதக்கமும். மகர யாழ். விருதும் பெறுவார். இவ்விருது இவ்வாண்டு நடைபெறும் கம்பன் விழாவின் முதல் நாள் நிகழ்வில் வழங்கப்படும்.

1993ம் ஆண்டுக்கான மகர யாழ் விருதை டாக்டர் ச சிவகுமாரனும், கடந்த ஆண்டு யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் அமரர் துரைராஜாவுக்கும் வழங்கப்பட்டது தெரிந்ததே. சி-ரி

---

இராணுவ

(1ம் பக்கத்தொடர்ச்சி)

றங்களை ஏற்படுத்தும் எண்ணம் ஜனாதிபதியிடம் ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

விரைவில் ஓய்வு பெறவுள்ள தற்போதைய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவுக்கு சேவை நீடிப்பு வழங்குவதா என்பது பற்றியும் ஜனாதிபதி விரைவில் முடிவுகளை அறிவிப்பார் எனவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 27 ம் திகதிக்கு முன் இந்த அறிவிப்பு வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ரி

கெனத் கோரிக்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம் இருக்கும் யுத்தக் கைதிகளைச் சந்தித்தனர்.

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு ஆயர் தம்மைக் கேட்டுக்கொண்டதாகவும், தாம் அதற்கு மறுத்துவிட்டதாகவும் உண்ணாவிரதிகள் தெரிவித்தனர்.

தாம் தொடர்ந்தும் நீர் அருந்தி உண்ணாவிரதத்தைத் தொடரப் போவதாகவும், தமது விடுதலைக்கான உரிய நடவடிக்கை எடுக்க படாது விடின் தாம் இறப்பது திண்ணம் எனவும் ஆயர் குழுவினரிடம் யுத்தக் கைதிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆயர் கெனத் பெர்னாண்டோ, விடுதலைப் புலிகளுடனும், அரசுடனும் யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பேசி முடிவுக்கு வரும்வரை தொடர்ந்து நீர் அருந்தி உண்ணாவிரதத்தைத் தொடர்வதன் மூலம், ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

இதேவேளை 15 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளின் பெற்றோர், யாழ்ப்பாணம் வருவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்க மறுத்திருப்பதால், அவர்களின் வருகை தடைப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. இதனையடுத்து யுத்தக் கைதிகளின் பெற்றோர் கொழும்பில் உண்ணாவிரதம் மேற்கொள்ளத் திட்டமிட்டு வருவதாகவும் தெரிவிக்சப்படுகிறது. கே.ரி

# சிறைக்காவலர் மீது கைதிகள் தாக்குதல்

## சென்னையில் சம்பவம்

(சென்னை)

சென்னை சிறைச்சாலையில் உள்ள கைதிகள், சிறைக் காவலர்களை கற்களாலும், தடிகளாலும் தாக்கிய சம்பவம் ஒன்று நேற்று முன் தினம் சென்னையில் இடம் பெற்றது.

சமீபத்தில் இந்தச் சிறைச்சாலையிலிருந்து 9 விடுதலைப் புலிகள் போராளிகள் தப்பிச் சென்றதையடுத்து, சிறைக் காவலர்கள் கைதிகளை அடித்து தாக்கினர் பின்பு கைதிகளிடம் கடுமையான விதத்தில் நடந்து கொண்டார்களாம். இதனால் சுமார் 1200 கைதிகள் கடந்த திங்கட்கிழமை அன்று உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிறைக் காவலர்களின் கடும் போக்காலே, கைதிகள் சிறை காவலர்களை தாக்கத் தொடங்கினார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (ம - ரி)

4—ம் கட்டப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகரனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவரது கடிதத்திற்கான பதிலைப் புலிகள் அடுத்த ஓரிரு தினங்களில் அனுப்பிவைப்பார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சி-ரி

ஐ. தே. க. பத்திரிகை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேரம் ஓர் ஆயுதக் கும்பலினால் தாக்கப்பட்டார். தலையிலும், உடலின் பல பகுதிகளிலும் பலத்த காயங்களுடன் இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிககப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்தப் பத்திரிகையை வெளியிடும் டாக்டர் ராஜித செனரத்னவுக்கும் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது இந்தப் பத்திரிகை தொடர்ந்து வெளிவருமானால், இவரது இரு பிள்ளைகளையும் கடத்தப்போவதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றுமொரு பத்திரிகையான 'சியரட்ட' கம்டலைக்கு எடுத்துச் செல்லப்படுகையில், இனம் தெரியாதோரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது. சி-ரி

பிரிகேடியர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எ. எம். யூ. செனவிரத்ன, ரி. சிவசண்முகம், கெமுனு குலதுங்க, எஸ். எஸ். கப்பு ஆராய்ச்சி, பி. சிறியால் வீரசூரிய யாலியநமுனி, அசோக ஜெயவர்த்தன, ஈ. ஏ. சமரதுங்க, டபிள்யூ. எம். பற்றிக் பெர்னாண்டோ, சபி ஜெயசுந்தர ஆகியோர் தற்போது மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள இராணுவ அதிகாரிகளாவர். (ரி)

அரசு முடிவைத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றுகையில் கூறினர்

மேற்படி அமைப்பின் தலைவர் திரு. சு. சிறில் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. தமிழ்செல்வன் மேலும் உரையாற்றுகையில்: ஜனாதிபதி திருமதி சந்திரிகாவின் பதில் எமக்கு பெரும் அதிர்ச்சியைய ஏற்படுத்தியது. அரசாங்கம் எம்முடன் முதலில் பேச்சுக்களை ஆரம்பமாகும்போது ஒரு அட்டவணையை எம்மிடம் தந்தது. அதில் முதலில் தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்னைகளைத் தீர்த்துவிட்டு பின்பு இனப் பிரச்சனை பற்றி பேசுவோம். அப்போதுதான் மக்களின் மனதில் ஒரு அமைதி ஏற்படும் என்று கூறியது. அதன் அடிப்படையிலேயே மூன்று கட்டம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. இறுதியில் அவர்கள் முன்வைத்த யோசனைகளை அவர்களே நிராகரித்து விட்டார்கள்.

இந்த மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகளிலும் ஏற்பட்ட நன்மை ஒன்றுதான். அது தான் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம். வேறு எந்த ஒரு பிரயோசனமும் ஏற்படவில்லை. இந்த மோதல் தவிர்ப்பையும் அரசு கொண்டுவந்தது தமது இராணுவத்தை பலப்படுத்தவே. சமாதனத்தை அரசாங்கம் உண்மையாக விரும்பியிருந்தால் நாம் கோரிய நிரந்தர யுத்த நிறுத்தநதை செய்திருக்கலாம்.

எமக்கு ஆத்திர மூட்டும் செயல்களை இராணுவம் தற்போது செய்யத் தொடங்கியுள்ளது. இதனால் மோதல் தவிர்ப்பை புலிகள் மீறி தம்மைத் தாக்குவார்கள் இதனால் மீண்டும் ஒரு பாரிய போரை இங்கு ஏற்படுத்திவிட்டு புலிகள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறினார்கள் என்று சர்வதேச உலகுக்கு எடுத்துக் கூறுவதே அரசின் தற்போதைய திட்டமாகும்.

உண்ணாவிரதத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை கைவிடுமாறும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று 15-வது நாளாக உண்ணாவிரதமிருக்கும் போர்க்கைதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் பிரதி நிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் இவ்வாறு ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இவ்வேண்டுகோள் அடங்கிய கடிதத்தை சிங்கள யுத்தக் கைதிகளுக்கு கையளிப்பதென முடிவுசெய்யப்பட்டது.

இது தொடர்பாக எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தங்கள் உண்ணாவிரதத்தை நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

தாங்கள் மேற்சொள்ளும் உண்ணாவிரதத்தை வெகுஜன அமைப்புக்கள் ஆழ்ந்த அனுதாபமாக நோக்குகின்றது தங்கள் விவகாரத்தில் ஸ்ரீலங்கா அரசு அரசியல் லாபம கருதி இழுத்தடித்து வருகிறது

மனிதத்திற்காக குரல் கொடுக்கும் தமிழ் மக்கள் தமிழீழ மண்ணில் அநாவசிய உயிரிழப்புக்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டுமென விரும்புகிறார்கள்

எனவே தாங்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை கைவிட்டு எமது உணர்வலைகளுக்கு மதிப்புக் கொடுக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ரி)

அரசை நம்பி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கைதிகளின் உறவினர்கள் மேற்படி கைதிகளுக்கு எழுதிய கடிதத்தில்தெரிவித்துள்ளனர்.

அங்கிலிகன் ஆயர் கெனத் பெர்னாண்டோ ஊடாக யுத்தக் கைதிகளின் உறவினர்கள் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளனர். இக்கடிதம் நேற்று உண்ணாவிரதிகளிடம் கையளிக்கப்பட்டது.

''உங்கள் உயிர்கள் அங்கு போனால், எங்கள் உயிர்கள் இங்கு போய்விடும். ஆகவே உங்கள் உண்ணாவிரதத்தை கைவிடுங்கள்'' என்று மிக உருக்கமாக உறவினர் கடிதம் எழுதியுள்ளார்கள்.

ஆயர் கெனத் பெர்னாண்டோவுடன் கூடச் சென்று உண்ணாவிரதிகளைப் பார்வையிட்ட யாழ். பரியோவான் ஆலயகுரவர் வண. நேசக்குமார் உண்ணாவிரதிகளின் நிலைபற்றி குறிப்பிடுகையில்;

உண்ணாவிரதிகளில் பெரும்பாலானோர் மயக்க நிலையிலேயே இருக்கிறார்கள். இவர்களின் நிலை மிகமோசமாகி வருகின்றது. இருவர் கோமா நிலைக்கு ஆழாகும் நிலைக்கு வந்து விட்டார்கள். என்றும் கூறினார். வி-ரி

தத்தம் நாடுகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

9ம் திகதிவரை வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தனர்.

பிரிட்டிஷ ராஜதந்திரி ஒருவர், தங்கள் விஜயம்பற்றி குறிப்பிடுகையில் தமது யாழ். விஜயத்தின்போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மருத்துவ மற்றும் கல்வி அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடியதாக தெரிவித்தார்.

தங்களது அரசாங்கங்கள் புனர்வாழ்வுக்கென அளித்து வரும் மேலதிக உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டுமென்பதில் ராஜதந்திரிகள் ஏகமனதாக உடன்பாடு தெரிவித்துள்ளார்கள். எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைகள், போர்தவிர்ப்பு நடவடிக்கைள், பாதுகாப்பு போன்ற விடயங்களில் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் குறித்து இந்த ராஜதந்திரிகள் விபரங்கள் கூற மறுத்து விட்டார்கள். கே-வி-ரி

எமது முன்னோர்கள் விட்ட தவறுகளை நாம் ஒரு போதும் விடமாட்டோம். இன்றைய இக்காலகட்டத்தில் மிகவும் கவனமாகவே எமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வோம்'' என்றும் கூறினார். வி-ரி

ஒருதலைப்பட்ச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]வை சந்திக்கக்கூடிய சூழ்நிலை நிலவியபோது நான் அவரைச் சந்தித்தேன்.

அந்தச் சந்திப்பில், வடக்கு-கிழக்கு மக்களின் அன்றாடப் பிரச்னையை விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்க்கவேண்டும். பூநகரி இராணுவ முகாம், கடல் வலயச் சட்டம் மற்றும் பொருளாதாரத் தடை, புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைகளைச் செய்யும்போது புலிகளின் பிரதிநிதிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தல், புனர்நிர்மாண வேலைகளை உடன் ஆரம்பிக்கும் செயற்பாடுகளில் புலிகளுடன் கலந்தாலோசித்தல், போன்ற விடயங்கள்பேசப்பட்டன. தீர்க்கப்படாத பிரச்னைகளை உடனடியாக அரசுபுலிகளுடன் பேசித் தீர்க்கவேண்டும் என்று வேண்டுகோளையும் நான்விடுத்தேன்,

நம்பிக்கை வைப்பதோடு- அப்படியான நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தையை நடாத்துவதன் மூலம் பிரச்னையைத் தீர்வுக்குக் கொண்டுவரலாம் என்று வலியுறுத்தினேன்.

திருமதி சந்திரிகாவுடன் விரிவாக ஒன்றும் பேசப்படவில்லை. ஆனால் அந்த நாட்டிலே நடைபெறுகின்ற பேச்சுவார்த்தையை எவ்வாறு உறுதிப்படுத்துவது, எவ்வாறு வலிமைப்படுத்தலாம் என்பது பற்றியே பேசினோம்.

மேலும் மக்களின் அன்றாடப் பிரச்னையான போக்குவரத்துப் பாதை, பொருளாதாரத் தடை போன்றவற்றைப் பற்றியும் பேசியதுடன், அரசாங்கம் பேச்சுவார்த்தையை ஆரம்பிதது, இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

புதிய கருத்துக்கள் எதுவும் அங்குபேசப்படவில்லை ஆனால் இந்தப் பிரச்னைகளை விடுதலைப் புலிகளுடன்தான் பேசித் தீர்க்கலாம் என்ற கருத்து பேச்சின்போது நிலவியகால் ஒரு நம்பிக்கை ஏற்படுகின்றது.

தீர்க்கப்படாத பிரச்னைகளை முதலில் தீர்த்துவைத்து, அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தையை விரைவில் இலங்கை அரசு ஆரம்பிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது. கே-ரி

---

# மரண அறிவித்தல்

## ந. ஐயம் பிள்ளை

(சமாதான நீதவான்)

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்தவரும், வட்டு. வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் கமலா தேவியின் அன்புக் கணவருமான திரு. ந. ஐயம் பிள்ளை, கொழும்பு மருதானையில் 15 - 03 - 95 ல் காலமானார். அன்னாரின் தகனக் கிரிகைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் 17 - 03-95 ல் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்: ஆ. சிவஞானம் (மைத்துனர்)

(ஏ 4825)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-